**ஜூலை – 07**

# TNPSC துளிகள்

- தகுதியான விண்ணப்பதாரர்கள் இந்தியாவைச் சேர்ந்த வெளிநாட்டுக் குடிமக்கள் (OCI) விண்ணப்பச் செயல்முறையை முழுமையாக இணையவழியில் பூர்த்தி செய்யும் வகையில், மின்னணு இந்தியாவைச் சேர்ந்த வெளிநாட்டுக் குடிமக்கள் (e-OCI) தளத்தை மத்திய உள்விவகார அமைச்சகம் (MHA) அறிமுகப்படுத்தியுள்ளது.
  - e-OCI அட்டை என்பது 2005 ஆம் ஆண்டில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த வெளிநாட்டுக் குடிமக்கள் (OCI) அட்டையின் டிஜிட்டல் வடிவமாகும்.
- 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- அமெரிக்க-இந்திய உத்திசார் கூட்டாண்மை மன்றம் (USISPF) ஆனது, இந்திய வணிகத் தலைவர் சுனில் பார்தி மிட்டலுக்கு தனது 2026 ஆம் ஆண்டிற்கான தலைமைத்துவ விருதை வழங்கியது.
- இந்திய தேசிய கொடுப்பனவு கழகத்தால் (NPCI) உருவாக்கப்பட்ட இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) ஆனது, யூரோபேங்க் மூலம் கிரேக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கிய நாடுகள் (U.S.), நாடு தழுவிய சுதந்திரம் 250 (Freedom 250) பிரச்சாரத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டு ஜூலை 4 அன்று தனது 250-வது சுதந்திர தினத்தை கொண்டாடியது.
  - 1776 ஆம் ஆண்டு ஜூலை 4 அன்று பிலடெல்பியாவில் உள்ள 13 அமெரிக்க காலனிகளின் பிரதிநிதிகளால் சுதந்திரப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதில் இருந்து 250 ஆண்டுகள் நிறைவடைவதை இந்த ஆண்டுவிழா குறிக்கிறது.
- இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு பாரம்பரியப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளதன் மூலம் மாநிலத்தின் மொத்த புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.
  - ஸ்பிதி சீபக்ஹார்ன் (சர்மம்), சலூனி சஃபேத் மக்கா (வெள்ளை மக்காச்சோளம்), சம்பா உலோகக் கலை, சிர்மௌரி லோயா, கின்னௌரி தொப்பி, மண்டி செபுவாடி, கின்னௌரி ஆப்பிள் மற்றும் கின்னௌரி நகைகள் ஆகியவை புதிதாக புவிசார் குறியீடு பெற்ற பொருட்களாகும்.
- ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய மாநிலங்களுக்கு இடையேயான மூத்தோர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், கேரளாவின் ஆன்சி சோஜன் 6.88 மீட்டர் தாண்டி அஞ்சு பாபி ஜார்ஜின் 22 ஆண்டு கால இந்திய மகளிர் நீளம் தாண்டுதல் தேசிய சாதனையை முறியடித்தார்.
- அஸ்ஸாமின் தின்சுகியா மாவட்டத்தில் உள்ள சோட்டா திங்ராய் தேயிலைத் தோட்டமானது, வணிக ரீதியாக உற்பத்தி செய்யப்பட்ட இந்தியாவின் முதல் மாச்சா தேயிலையை உற்பத்தி செய்து கவுஹாத்தி தேயிலை ஏல மையத்தில் விற்பனை செய்துள்ளது.
  - மாச்சா என்பது குறைந்த சூரிய ஒளியின் கீழ் வளர்க்கப்படும் கேமல்லியா சினென்சிஸ் இலைகளிலிருந்து தயாரிக்கப் பட்டு நிழலில் வளர்க்கப்பட்டு நன்கு அரைக்கப்பட்ட பசுந் தேயிலைப் பொடியாகும்.


# தேசியச் செய்திகள்

## இயங்குதிறன் கொண்ட குற்றவியல் நீதி அமைப்பு

- இயங்குதிறன் கொண்ட குற்றவியல் நீதி அமைப்பை (ICJS) நாடு முழுவதும் செயல்படுத்துவதற்கான பணிகள் திட்டமிட்டபடி நடைபெற்று வருவதாக மத்திய உள் விவகார அமைச்சகம் (MHA) அறிவித்துள்ளது.
- 2027 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல், பாரதிய நியாய சன்ஹிதா (BNS), பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா (BNSS) மற்றும் பாரதிய சாக்சிய அதினியம் (BSS) ஆகியவற்றின்

கீழான அனைத்து விசாரணைகள் மற்றும் வழக்குகள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்படும்.


- ❖ இயங்குதிறன் கொண்ட குற்றவியல் நீதி அமைப்பு (ICJS) என்பது காவல் துறை, நீதிமன்றங்கள், சிறைகள், வழக்குத் தொடரல் மற்றும் தடயவியல் ஆய்வகங்களை ஒரே அமைப்பில் இணைக்கும் ஒரு தேசிய டிஜிட்டல் தளமாகும்.
- ❖ இது மத்திய உள்துறை விவகார அமைச்சகத்தின் (MHA) கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் (NCRB) செயல்படுத்தப்பட்டு, தேசிய தகவலியல் மையத்தால் (NIC) உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ ICJS ஆனது "ஒரு தரவு, ஒரு முறைப் பதிவு" என்ற கொள்கையைப் பின்பற்றுவதுடன் இதன் மூலம் வழக்கின் தகவல்களை ஒருமுறை உள்ளீடு செய்து இணைக்கப்பட்ட அனைத்து முகமைகளுக்கிடையேயும் பாதுகாப்பாகப் பகிர்ந்து கொள்ள முடியும்.
- ❖ காகிதமில்லா மற்றும் டிஜிட்டல் வழக்கு மேலாண்மை மூலம் குற்றவியல் விசாரணைகள் மற்றும் வழக்குகளின் வேகம், வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.





## மருந்துகள் விதிகள், 1945-இல் திருத்தம்

- ❖ மேம்பட்ட செல், ஸ்டெம் செல், மரபணு சிகிச்சை தயாரிப்புகள் மற்றும் செனோ கிராஃப்ட்ஸ் (அயலின ஒட்டுறுப்புகள்) ஆகியவற்றை ஒரே சீரான மத்திய ஒழுங்குமுறை அமைப்பின் கீழ் கொண்டு வர, மருந்துகள் விதிகள், 1945-ஐ அரசாங்கம் திருத்தி உள்ளது.
- ❖ இந்த திருத்தமானது உரிமம் வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதலுக்காக இந்தத் தயாரிப்புகளை மத்திய உரிமம் வழங்கும் ஒப்புதல் அதிகார அமைப்பின் (CLAA) கீழ் கொண்டு வருகிறது.
- ❖ CLAA என்பது இந்தியாவின் தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார அமைப்பான மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) ஒரு பிரிவாகும்.
- ❖ மரபணு சிகிச்சை தயாரிப்புகள் நோய்களுக்கு சிகிச்சையளிக்க அல்லது தடுக்க மரபணுக்களைப் பயன்படுத்துகின்ற அதே நேரத்தில் ஸ்டெம் செல் சார்ந்த தயாரிப்புகள் மருத்துவ சிகிச்சைக்காக ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி தயாரிக்கப் படுகின்றன.
- ❖ செனோகிராஃப்ட்ஸ் (அயலின ஒட்டுறுப்புகள்) என்பது ஒரு இனத்திலிருந்து (பன்றிகள் போன்றவை) மற்றொரு இனத்திற்கு (மனிதர்கள் போன்றவை) மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படும் உறுப்புகள் அல்லது திசுக்கள் ஆகும்.

- இந்தியா முழுவதும் மேம்பட்ட சிகிச்சைகளின் சீரான ஒழுங்குமுறை, பாதுகாப்பு, தரம் மற்றும் கண்காணிப்பை உறுதி செய்வதை இத்திருத்தம் நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## ஆயுர்வேதம் மீதான நிதி ஆயோக்கின் வழிகாட்டுதல் வரைபடம்





- ஆயுர்வேதத்தின் உலகளாவிய வீச்சை 2025 முதல் 2047 ஆம் ஆண்டு வரை விரிவுபடுத்துவதற்காக "ஆயுர்வேதத்தை உலகமயமாக்குவதற்கான உத்திசார் செயல் வரைபடத்தை" நிதி ஆயோக் வெளியிட்டது.
- ஆயுர்வேத ஏற்றுமதி 1.09 பில்லியன் அமெரிக்க டாலரில் (2014) இருந்து 2.16 பில்லியன் அமெரிக்க டாலராக (2023) அதிகரித்துள்ளது என்பதோடு மேலும் இது தற்போது சுமார் 150 நாடுகளை சென்றடைகிறது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யுனானி (ASU) ஆகியவற்றை சர்வதேச நோய்கள் வகைப்பாடு (ICD-11) மற்றும் சர்வதேச சுகாதார தலையீடுகளின் வகைப்பாடு (ICHI) ஆகியவற்றில் சேர்த்துள்ளது.
- உலகளாவிய ஆயுர்வேதப் பதிவேடு (GAR), உலக சுகாதார அமைப்பு-சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (WHO-GMP) சான்றிதழ், சர்வதேச கல்வி, ஆராய்ச்சி மற்றும் மருத்துவ மதிப்பு பயண (MVT) மையங்கள் ஆகியவற்றை இந்த வரைபடம் முன்மொழிகிறது.
- 2047-ஆம் ஆண்டுக்குள் குறைந்தது 20 தேசிய சுகாதார அமைப்புகளில்

ஆயுர்வேதத்திற்கான அங்கீகாரத்தை பெறுவதையும், 10 நாடுகளில் அதற்கான காப்பீட்டுப் பாதுகாப்பை அடைவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 2026




- சமூகப் பாதுகாப்புத் தொகுப்பு, 2020-இன் கீழ், 1952 ஆம் ஆண்டின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்திற்குப் பதிலாக, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) திட்டம், 2026-ஐ மத்திய அரசு அறிவித்தது.
- கட்டாய EPF பங்களிப்பானது ஊழியர் மற்றும் முதலாளி ஆகிய இருவராலும் ஊதியத்தில் தலா 12% ஆகத் தொடர்கின்ற அதே நேரத்தில் அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு 10% விகிதம் தொடர்கிறது.
- வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்காக மின்னணுத் தாக்கல்கள், இணையவழி உரிமைகோரல்கள், மின்னணு சேமிப்புக் கணக்குப் புத்தகங்கள் மற்றும் அனைவருக்குமான கணக்கு எண் (UAN) இணைப்பு ஆகியவற்றை இத்திட்டம் ஊக்குவிக்கிறது.
- மருத்துவச் சிகிச்சை, கல்வி, திருமணம், வீட்டு வசதி மற்றும் பிற குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக, பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பகுதியாக தொகையை திரும்பப் பெறுவதற்கான விதிகளையும் இது புதுப்பிக்கிறது.
- டிஜிட்டல் இணக்கம், கணக்கு பெயர்வுத் திறன் மற்றும் சமூகப் பாதுகாப்புத் தொகுப்பு, 2020 உடனான ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## Z25 கழுகு கண்காணிப்பு


- ரேடியோ காலர்/ரேடியோ குறியீடு பொருத்தப்பட்ட வெண்முதுகு பிணந்திண்ணிக் கழுகை (Z25) வனவிலங்கு பாதுகாப்பு அறிவியலாளர்கள் கண்காணித்து வந்தனர், ஆனால் தமிழ்நாட்டின் முதுமலை புலிகள் காப்பகத்தில் மின் கடத்தி கம்பியில் மின்சாரம் தாக்கி அது இறந்தது.
- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் (BNHS) மூலம் அவற்றின் நடமாட்டத்தை

நிகழ்நேரத்தில் கண்காணிப்பதற்காக ரேடியோ டெலிமெட்ரி/தொலைஅளவீட்டுக் கருவிகள் பொருத்தப்பட்டு, சிறை பிடிக்கப்பட்ட நிலையில் வளர்க்கப்பட்ட ஐந்து கழுகுகளில் Z25-உம் ஒன்றாகும்.

- இந்தப் பறவை ஹரியானாவில் உள்ள ஜடாயு பாதுகாப்பு இனப்பெருக்க மையத்தில் வளர்க்கப்பட்டு, மகாராஷ்டிராவின் தடோபா-அந்தாரி புலிகள் காப்பகத்தில் விடுவிக்கப் பட்டு, பின்னர் கர்நாடகாவில் மீட்கப்பட்டு முதுமலைக்கு மாற்றப்பட்டது.
- வனப்பகுதியில் வாழ்வதற்குப் பதிலாக மனிதர்கள் அளிக்கும் உணவுக்கு அது பழகி விட்டதால், Z25 கழுகு தொடர்ந்து மனிதக் குடியிருப்புகளை நோக்கிச் சென்றதை கண்காணிப்புத் தரவுகள் காட்டுகின்றன.
- ஆபத்தான நிலையில் உள்ள பறவைகளைக் கண்காணிக்கவும், அவற்றை விரைவாகக் கண்டறியவும், வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் மீட்பு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும் ரேடியோ டெலிமெட்ரி/தொலைஅளவீட்டுக் கருவிகள் அறிவியலாளர்களுக்கு உதவுகிறது.




## போடோலேண்ட் பகுதியின் பட்டாம்பூச்சிகள்




- அஸ்ஸாமில் உள்ள போடோலேண்ட் பிராந்திய பகுதியின் (BTR) பட்டாம்பூச்சிகளை ஆவணப்படுத்தும் சிறு புத்தகத்தை அஸ்ஸாம் வனத்துறை வெளியிட்டது.
- 3,653 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட போடோலேண்ட் வனப்பகுதி, அஸ்ஸாமில்

பதிவுசெய்யப்பட்ட 620 பட்டாம்பூச்சி இனங்களில், பல அரிய, ஒரிடத்திற்குரிய அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கு மட்டுமே உரிய மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான இனங்கள் உட்பட 346 பட்டாம்பூச்சி இனங்களுக்கு ஆதரவளிக்கிறது.

- இப்பகுதி இந்தோ-மலேய, கிழக்கு இமயமலை மற்றும் இந்தோ-கங்கை உயிரியல் புவியியல் மண்டலங்களின் சந்திப்புப் புள்ளியில் அமைந்துள்ளதால், இது வடகிழக்கு இந்தியாவின் வளமான பட்டாம்பூச்சி வாழிடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
- பட்டாம்பூச்சிகள் முக்கியமான மகரந்தச் சேர்க்கையாளர்களாகவும், சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தின் குறிகாட்டிகளாகவும், வனப் பல்லுயிர் மற்றும் உணவு வலைகளின் ஆதரவாளர்களாகவும் உள்ளன.
- இந்தச் சிறு புத்தகம் போடோலேண்ட் பல்கலைக்கழகம், வடகிழக்கு பட்டாம்பூச்சி சந்திப்பு வலையமைப்பு மற்றும் பிற பிராந்திய பட்டாம்பூச்சி நிபுணர்களின் பல ஆண்டு கால அறிவியல் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## புக்கர் பரிசுக்கான புதிய சகாப்தம்




- புக்மேன் அறக்கட்டளை அடுத்த 10 ஆண்டுகளுக்கு நிதியளிப்பதாக உறுதியளித்ததை அடுத்து, சர்வதேச புக்கர் பரிசு 'புக்மேன் சர்வதேச புக்கர் பரிசு' என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- வெற்றியாளருக்கான பரிசுத் தொகை £50,000-இல் இருந்து £100,000 ஆக இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இது எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளருக்கு இடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.
- இப்பரிசு ஐக்கிய ராஜ்ஜியம் (UK) அல்லது அயர்லாந்தில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட சிறந்த புனைகதைக்கு அங்கீகாரம் அளிக்கிறது.
- டாரியா புக்மேன் மற்றும் டிமிட்ரி புக்மேன் ஆகியோரால் நிறுவப்பட்ட புக்மேன் அறக்கட்டளை, 2036 ஆம் ஆண்டு வரை இப்பரிசுக்கு ஆதரவளிக்கும்.
- இந்தப் பரிசு 2005 ஆம் ஆண்டில் 'மேன் புக்கர் சர்வதேச பரிசு' என்று தொடங்கப்பட்டு, 2016-ஆம் ஆண்டில் ஆண்டு விருதாக மாறிய பின்னர் 2019 ஆம் ஆண்டில் 'சர்வதேச புக்கர் பரிசு' என மறுபெயரிடப் பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★